
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1005**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

**33**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# கா.க.புதூரில் அதிகாரம் இழந்த ஆதிக்கம்!

பொங்கல் நாளில் ஒன்றிய அரசு தேர்வுகளை நடத்துவதும், அதற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்புகள் கிளம்புவதும் நடந்ததுண்டு. காரணம், மதச்சாயம் பூசப்படாத தமிழர் திருநாளாகப் பொங்கல் இருப்பது, ஆரியத்தின் கண்களை உறுத்திக்கொண்டேயிருக்கிறது. தமிழ்நாட்டில் இந்துத்துவ எண்ணம் கொண்டோரின் நோக்கம் அதுவாகத்தான் உள்ளது என்பதை, பொள்ளாச்சி கா.க.புதூரில் இந்து முன்னணி வெளிக்காட்டியது. 2006 ஆம் ஆண்டில் இருந்து அங்கு பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் 2015ஆம் ஆண்டில், பெரியார் அமைப்புகள் சார்பில் பொங்கல் விழா கொண்டாடக் கூடாது என இந்து முன்னணி எதிர்க்கத் தொடங்கியது.

2017-இல் பொங்கல் விழாவுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு காசு நாகராசனின் வீட்டிற்குள் புகுந்து சிலர் தாக்குதலில் ஈடுபட்டனர். உடைமைகளைச் சேதப்படுத்தினர். அதன்காரணமாக, அந்த ஆண்டு பொங்கல் விழா நடைபெறவில்லை. அது தொடரும் என அந்தக் காலிகள் நினைத்துள்ளனர். ஆனால், அடுத்த ஆண்டு பொங்கல் விழா நடத்த அனுமதி கோரி, கா.க. புதூரைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்டோர் இணைந்து வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். கா.க.புதூர் மக்களின் ஒற்றைப் பெரு விழாவாகப் ‘பொங்கல்’ மக்கள் மயமாகி இருந்ததைக் காட்டியது அச்சம்பவம்.







“கா.க.புதூரில் இனி யாரும் சாதியை நிலைநாட்ட முடியாது, ஆதிக்கத்தைச் செலுத்த முடியாது. மக்கள் படித்துவிட்டார்கள், வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். சுயமரியாதையோடு வாழ்ந்து வருகிறார்கள். அதுதான் எங்களுடைய இத்தனை ஆண்டு பணிகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகப் பார்க்கிறேன்.”

-காசு நாகராசன், துணைப் பொதுச் செயலாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

சட்ட எரிப்புப் போராட்டத்தின் ஐம்பதாவது ஆண்டில், கா.க.புதூரில் சாதி ஒழிப்பு மாவீரர் நினைவுத்தூண் 2007-இல் அமைக்கப்பட்டது. உயிர் நீத்தவர்களில் சிலருக்கு ஆங்காங்கே நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், உயிர் நீத்த 17 பேரின் நினைவாக எழுப்பப்பட்ட ஒற்றை நினைவுச் சின்னம், கா.க.புதூரில் அமைக்கப்பட்டதுதான். அடுத்த ஆண்டில், சாதி மறுப்பாளர்கள் சங்கமம் உருவாக்கினர். சாதி மறுப்பு இணையர்கள் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 26-இல் நினைவுத்தூண் முன்பு கூடி, சட்ட எரிப்புப் போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி வருகின்றனர்.

2006-இல் காசு நாகராசன் - சாந்தி இணையரின் திருமணம் தொடங்கி இன்றுவரை 15-க்கும் மேற்பட்ட ஜோடிகள் அங்கு சாதி மறுப்புத் திருமணம் செய்துள்ளனர். உள்ளூரிலேயே மாநாடு போல நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்களும் உண்டு. தமிழ்நாடு திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம், இப்போது திராவிட இயக்கத் தமிழர் பேரவை என வெவ்வேறு அமைப்புகளில் ஒற்றை இலட்சியத்தை நோக்கி 30 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது கா.க.புதூர். சாதியத்தின் இருப்பை இல்லாமல் செய்து, கல்வி - வேலைவாய்ப்பில் முன்னேற வேண்டு மென்ற அந்தச் சமூக நீதி இலக்கில், சுற்றுப் புறங்களில் உள்ள மற்றெந்தக் கிராமங்களையும் விட வேகமாக முன்னேறியிருக்கிறது, அந்த ஊர். ஆனால், இவ்வளவு மாற்றங்களுக்குப் பிறகும் ஊர்ப் பெயரில் மட்டும், ‘காளியப்ப கவுண்டன் புதூர்’ என சாதி அடையாளம் தொடர்வது, விழியில் விழுந்த துரும்பு போல அவர்களை உறுத்திக் கொண்டே இருந்தது.

இந்நிலையில்தான், ஊர்ப்பெயரில் இருந்து சாதி அடையாளங்களை நீக்கும் அரசாணையை 08.10.2025 அன்று திராவிட மாடல் அரசு வெளியிட்டது. அந்த ஆணையை ஆயுதமாக்கி, ஊர்ப்பெயரிலும் சமத்துவத்தை ஏற்படுத்திட முனையத் தொடங்கியிருக்கிறது, கா.க.புதூர்.

...பயணிப்போம்.



## வெற்று விளம்பர குஜராத் மாடல்!

வடமாநிலங்களில் ‘சத் பூஜை’ என்கிற சடங்கு பெரும்பான்மையான மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தச் சடங்கு நிகழ்ச்சியில், பிரதமர் மோடி நீராடுவதற்காக யமுனை ஆற்றங்கரையில் பிரமாண்ட நீச்சல் குளம் கட்டியிருக்கின்றனர். யமுனை ஆற்றைச் சுத்தப்படுத்துகிறோம் எனப் பல கோடிகளைக் கொட்டிக் கொண்டிருக்கிறது, ஒன்றிய பா.ஜ.க அரசும், டெல்லியை ஆண்டுகொண்டிருக்கும் பா.ஜ.க நிர்வாகமும். ஆனால், பல ஆண்டுகளாக நீடித்து வரும் யமுனை நதி மாசுபாட்டுக்கு முழுமையாகத் தீர்வு எட்டப்படவில்லை.

நச்சு நுரைகளுக்கு நடுவே, யமுனை ஆற்றில் மக்கள் நீராடுவது பெரும் விவாதங்களை உருவாக்கி வந்தது. இந்த ஆண்டு, அதை மேலும் அதிகரித்திருக்கிறார் பிரதமர் மோடி. யமுனை நதியைச் சுத்தப்படுத்திவிட்டோம் என விளம்பரப்படுத்தும் வகையில், சத் சடங்கினையொட்டி யமுனையில் மோடி நீராடும் வகையில் ஏற்பாடுகளைச் செய்தவர்கள், பிரமாண்ட நீச்சல் குளத்தைக் கட்டியுள்ளனர். யமுனை நதிக் கரையிலேயே, இந்த செயற்கைக் குளத்தை உருவாக்கி, சுத்திகரிக்கப்பட்ட நீரினை நிரப்பி உள்ளனர்.

யமுனை ஆற்றில் மக்கள் குளிக்கும் நீர் கருப்பு நிறத்தில், குளிப்பதற்குத் தகுதியில்லாத நிலையில் உள்ளது. ஆனால், பிரதமர் மோடிக்காகத் தயாரான குளத்தில் நீர் பளிங்குபோல உள்ளது. இதை பி.பி.சி உள்ளிட்ட ஊடகங்கள் வெளியிட்டு அம்பலப்படுத்தியுள்ளன.

‘ஏழைத்தாயின் புதல்வன்’ எனக் கூறிக்கொண்டே ஆற்றங்கரையில் செயற்கைக் குளத்தில், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரில் நீராட ஏற்பாடு என காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் விமர்சனம் செய்துள்ளார். ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. வெற்று விளம்பர மாடலை குஜராத் மாடல் என ஏமாற்றியவர்களுக்கு, இந்த விமர்சனங்கள் உறைக்கப்போவதில்லை.

## ஃப்ளாஷ்பேக்



சி.எம்.ஒய்.முகமது யூனுஸ்



### கழகமே என் உயிர் மூச்சு!

1991-ஆம் ஆண்டு, மேட்டுப்பாளையம் நகரத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது, நகர மாணவர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், தலைவரிடம் எடுத்துக்கொண்ட அரிய புகைப்படம். 2014-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 12 ஆண்டு காலமாக கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் நகரச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். கழகமே என் உயிர் மூச்சு!

– சி.எம்.ஒய்.முகமது யூனுஸ், நகர கழகச்செயலாளர் மேட்டுப்பாளையம் வடக்கு, கோவை வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

**83**

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# எஸ்.ஐ.ஆர். என்கிற தேர்தல் மோசடி!

## கடிவாளம் போடும் கழகம்!



***‘எஸ்.ஐ.ஆர். எனும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு நடவடிக்கையைக் கண்டு தி.மு.க. பயப்படுவதால்தான் அதை எதிர்க்கிறது’ என்று அ.தி.மு.க தரப்பில் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறதே?***

‘‘தி.மு.க. எந்தக் காலத்திலும் தேர்தலைக் கண்டு பயந்ததேயில்லை. அ.தி.மு.கவுக்குத்தான் பயம் பிடித்து ஆட்டுகிறது. அதுவும் பா.ஜ.க.வுடன் நேரடியாகக் கூட்டணி அமைத்த எடப்பாடி பழனிசாமியால், அ.தி.முக. தொண்டர்களே தங்கள் சொந்தக் கட்சியின் நிலையைப் பற்றி கவலையோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்ததால்தான் போன முறை ராயபுரம் தொகுதியில் தோற்றேன் என்று மீடியாக்களிடம் ஒப்பனாகப் பேசியவரை வைத்துதான் அ.தி.மு.க தலைமை அறிக்கை கொடுத்திருக்கிறது. இதிலிருந்தே பயமும் அடிமைத்தனமும் யாரிடம் இருக்கிறது என்பது புரியும். எஸ்.ஐ.ஆர்-க்கு வருவோம்.

சட்டமன்றத் தேர்தலை அடுத்த வாரம் சந்திக்கும் பீகார் மாநிலத்தில் எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில் ஏறத்தாழ 65 இலட்சம் வாக்காளர்களை நீக்கியது தேர்தல் ஆணையம். இவற்றில் பெரும்பாலானவை முஸ்லிம்கள், தலித் மக்களுடைய வாக்குகள். அதுபோல பெண் வாக்காளர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. அதாவது, பா.ஜ.க. எதிர்ப்பு வாக்குகள் திட்டமிட்டு நீக்கப்பட்டன. இதைத் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்த்தன. எஸ்.ஐ.ஆர். எனும் அநியாயத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றம் சென்றன.

வாக்காளர்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ஒன்றாக ஆதார் கார்டை ஏற்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. தேர்தல் ஆணையம் அதை ஏற்க மறுத்தது. ஆதார் அட்டையை ஆவணமாக ஏற்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதால், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெறவுள்ள எஸ்.ஐ.ஆரில் ஆதார் கார்டைக் காட்டி வாக்குரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இது, தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் ஜனநாயகம் காக்கும் சட்டப்போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி. இதுவே முழு வெற்றியல்ல.

தகுதியுள்ள வாக்காளர்களை (முஸ்லிம்கள், தலித்துகள் போன்றோர்) மொத்தமாக நீக்குவதையும், தகுதியற்ற வாக்காளர்களை (வெளிமாநிலத்திலிருந்து வந்தவர்கள்) மொத்தமாகச் சேர்ப்பதையும் தடுக்கின்ற வகையில் தி.மு.க.வினர் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வீடு வீடாக மக்களைச் சந்தித்து, விவரங்களைப் பெற்று செயல்பட வேண்டும் என அக்டோபர் 28 அன்று மாமல்லபுரத்தில் தி.மு.க. நிர்வாகிகளுக்கு நடந்த பயிற்சிக் கூட்டத்தில் கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் விளக்கமாகத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 68,000 + வாக்குச்சாவடிகள் உள்ளன. இவை அனைத்திலும் பாக முகவர்களை நியமித்திருக்கிற ஒரே கட்சி, தி.மு.க. மட்டும்தான். அந்த அளவுக்கு அமைப்பு வலிமையும் தேர்தல் பணிக்கான வியூக அமைப்பும் கொண்டுள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம். அந்த, தேர்தல் ஆணையத்தின் மோசடிகளையும் சட்டரீதியாகத் தடுக்கக்கூடிய ஆற்றலைப் பெற்று, ஜனநாயகம் வழங்கியுள்ள சட்டஉரிமையான வாக்குரிமையைத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெற்றுத்தர போராடுகிறது. எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில் தேர்தல் ஆணையத்தை வைத்து மோசடி செய்ய நினைத்த பா.ஜ.க.வுக்குக் கடிவாளம் போட்டிருப்பது தி.மு.கழகம். அதே நேரத்தில், பா.ஜ.க. போட்டுள்ள கடிவாளத்தில் மாட்டிக்கொண்டு எந்தத் திசையில் செல்கிறோம் என்பதைக்கூட அறியாமல் இருக்கிறது அ.தி.மு.க.

...வினா தொடரும்.

## கருவூலம்

### அதிகாரபூர்வ சின்னம்!

கலைஞரால் கழகப் பிரச்சாரத்திற்காக ஒரு வார காலத்தில் எழுதப்பட்ட நாடகம், ‘உதயசூரியன்’. கழகப் பிரச்சாரத்துக்காகவும், கழகத் தோழர்களின் வழக்குச் செலவுக்கு நிதி திரட்டவும் அந்த நாடகம் நடத்தப்பட்டது. 1958 -ஆம் ஆண்டு பிப்ரவரி 22 மற்றும் 23 ஆம் தேதி, தேவகோட்டையில் நடத்தப்பட்ட மாநாட்டில் அரங்கேறியது, அந்த நாடகம். அடுத்த ஒரு வாரத்தில், கழகத்தின் அதிகார பூர்வ சின்னமாக உதயசூரியன் அறிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131